தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

விளம்பி, ஆனி 13, திருவள்ளுவர் ஆண்டு–2049

2018 ஜூன் 27, புதன்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“ஆற்றின் அளவறிந்து ஈக; அதுபொருள்
போற்றி வழங்கும் நெறி.”

நம் வருமானத்தின் அளவு அறிந்து அதற்குத் தக்கபடிதான் பிறருக்கு உதவ வேண்டும். அதுவே பொருளைச் சேமித்துப் பாதுகாத்து வாழும் வாழ்க்கை நெறியாகும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 221, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

221—

சார் கருவூலத்திற்குக் கட்டடம்

***7178—திரு. வி. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் சார் கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், துணை முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கத்தில் தற்போதுள்ள சார் கருவூல அலுவலகம், 29-2-2016 அன்று முதல் பூண்டி சாலையில் அமைந்துள்ள பழைய வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில், அரசுக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. சார் கருவூலத்திற்கான சொந்தக் கட்டடம் கட்ட ரூ.80,52,000/- மதிப்பீட்டில், பூண்டி சாலையிலுள்ள வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, சார் கருவூலக் கட்டடம் கட்டுவதற்கு பொதுப் பணித் துறைமூலம் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, 18-5-2018 அன்று பணிகள் துவங்கப்பட்டுவிட்டன. 3,147.3 சதுர அடி பரப்பளவில் கட்டடம் கட்டுவதற்கு பணிகள் நடந்து வருகின்றன. தற்சமயம் அடித்தளப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டடத்திற்குத் தேவையான ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்திற்கான மின் இணைப்பு, மின் வாரியத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. கட்டடப் பணிகள், டிசம்பர் 2018-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. வி. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வப்போது மனிதர்கள் பிறக்கிறார்கள். ஆயிரம் ஆண்டிற்கு ஒரு முறைதான் தீர்க்கதரிசிகள் தோன்றி தேசத்தை வாழ வைக்கிறார்கள். ஈடில்லா தீர்க்கதரிசியாய், இணையில்லா அரசியல் வித்தகராய், ஒப்பில்லா முதலமைச்சராய், உலகத் தமிழர்களின் உன்னதத் தலைவியாய், கருணையே வடிவமாய், காவல் தெய்வமாய் விளங்கிய இதய தெய்வம் மறைந்த முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கமலப் பாதங்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை ஆயிரம் எதிர்ப்பு அலைகள் நித்தமும் கைகளை நீட்டியபோதும், தமிழ்நாட்டின் இன்னலைத் தீர்த்திட சதா சிந்தனை செய்திடுவோம் என்னும் வித்தகத் தலைவி விட்டுச் சென்ற பணியினைத் தொடர்ந்து செய்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கலசப்பாக்கத்தில் உள்ள சார் கருவூலத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. இதற்காக ஆணையிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது, புதியதாக அமைக்கப்பட்டுள்ள ஜமுனாமரத்தூர் வட்டத்தில் சார் கருவூல அலுவலகம் அமைத்துத் தர வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு வருவாய் வட்டத்திற்கும், ஒரு சார் கருவூல அலுவலகம் அமைக்கப்படும் என்ற கொள்கை முடிவினை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்து, அது இப்போது தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், ஜமுனாமரத்தூர் வட்டத்தில் சார் கருவூல அலுவலகத்தைக் கூடிய விரைவில் அமைக்க நிதிநிலைமைக்கேற்ப ஆய்வு செய்து, பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. வி. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்படும் என்று அறிவித்த நமது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்து, அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதியில் கீழ்பெண்ணாத்தூர் தாலுகா பிரிக்கப்பட்டிருக்கிறது. அங்கு சார்*

கருவூலம் இல்லாமல் இருக்கிறது. அதனால் திருவண்ணாமலைக்குச் சென்று challan மூலம் பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எங்கள் பகுதியில் இடம் இருக்கிறது. எங்கெங்கு இடம் இருக்கிறதோ, அங்கு சார் கருவூல அலுவலகம் கட்டுவதற்கு அரசு முன்வந்தால் உடனடியாகப் பணிகளை முடிக்க இயலும். பல இடங்களில் நிதி ஒதுக்கப்பட்டு இடம் இல்லாமல் இருக்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆனால், எங்களுடைய கீழ்பெண்ணாத்தூர் பகுதியிலே சார் கருவூல அலுவலகம் உருவாக்குவதற்குத் தேவையான இடம் தயாராக இருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டே அங்கு சார் கருவூல அலுவலகம் உருவாக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வருவாய் வட்டங்கள்-தாலுகாக்கள் மொத்தம் 292, சார் கருவூலங்கள் உள்ள தாலுகாக்கள் 243, தாலுகா தலைமையிடங்கள் உள்ள சார் கருவூலங்கள் 236, தாலுகா இல்லாத இடங்களில் உள்ள கருவூலங்கள் 7. சார் கருவூலங்கள் இல்லாத தாலுகா தலைமையிடங்கள் மொத்தம் 56. அதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கீழ்பெண்ணாத்தூர் பகுதியும் வருகிறது. ஆகவே, நிதிநிலைக்கேற்ப, இந்த 56 தாலுகா தலைமையிடங்கள் இருக்கின்ற இடங்களில், சார் கருவூலங்கள் இல்லாத இடங்களில் படிப்படியாக மாண்புமிகு அம்மா அவர்களின் கொள்கையின் அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், புதிய சார் கருவூலங்கள் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

2018 ஜூன் 27]

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னை வாழ வைத்த தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய வழியில் நல்லாட்சி நடத்தி வருகிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய பணிவான வணக்கத்தை உரித்தாக்குகிறேன்.*

திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி தாலுகா புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. அந்தத் தாலுகா பகுதியில் புதிதாகக் கருவூலம் கட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடம் அன்போடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னவாறு, தாலுகா தலைமையிடங்களில் சார் கருவூலம் இல்லாத இடமாக ஊத்துக்குளி வருகின்ற காரணத்தினால், அங்கு ஆய்வு செய்யப்பட்டு, சார் கருவூலம் அமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 222, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். காளிமுத்து, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

222—

புதிய கல்வி மாவட்டம்

***12661—திரு. வி.எஸ். காளிமுத்து:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், தாராபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய கல்வி மாவட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?